- 05 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 1-3 திருக்குறள்களும் மற்றும் ஆத்திசூடி 1-5
- 06 வயதினருக்கு 1-4 திருக்குறள்களும் (4 இன் பொருளும்) மற்றும் ஆத்திசூடி 1-8
- 07 வயதினருக்கு 1-6 திருக்குறள்களும் (4-6 பொருளும்) மற்றும் ஆத்திசூடி 1-11
- 08 - 09 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 1-7 திருக்குறள்களும் (4-7 பொருளும்) மற்றும் தொல்காப்பிய எழுத்ததிகாரம் 1-5
- 10 - 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 1-9 திருக்குறள்களும் (4-9 பொருளும்) மற்றும் தொல்காப்பிய எழுத்ததிகாரம் 1-11
- 13 - 15 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 1-11 திருக்குறள்களும் (4-11 பொருளும்) மற்றும் தொல்காப்பிய எழுத்ததிகாரம் 1-13

# திருக்குறள்கள்

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

கல்வி கற்க நல்ல நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும், அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.

2. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

உள்ளக் கமலத்தில் - மனத்தில் - சென்றிருப்பவனான
இறைவனுடைய மாட்சியமைப்பட்ட அடிகளை எப்போதும்
நினைப்பவர்கள் , உலகில் அழிவின்றி வாழ்வார்கள்.

3. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு

ஒழுக்கத்தில் நிலைத்து நின்று பற்று விட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாக போற்றி கூறுவதே நூல்களின் துணிவாகும்.

4. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐந்து பொறிகளின் வழியாக வரும் ஆசைகளை அறுத்தவனுடைய மெய்யான ஒழுக்க வழியில் நின்றவர்கள், எக்காலத்திலும் ஒரு தன்மையராய் வாழ்வார்கள்.

5. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியாது. அன்புக்குரியவரின் துன்பங்காணுமிடத்து, கண்ணீர்த்துளி வாயிலாக அது வெளிப்பட்டுவிடும்.

6. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

இல்வாழ்க்கையின் அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழக்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

7. தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

மனச்சாட்சிக்கு எதிராகப் பொய் சொல்லக்கூடாது அப்படிச் சொன்னால், சொன்னவரின் மனமே அவரைத் தண்டிக்கும்.

8. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை.

உதட்டளவில் இன்றி உளமார வாய்மை பேசுகிறவர்கள் தவமும், தானமும் செய்கின்றவர்களைவிட உயர்ந்தவர்களாவார்கள்.

9. பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.

பொருள் வளம் நிறைந்ததாகவும், பிறர் போற்றத் தக்கதாகவும், கேடற்றதாகவும், நல்ல விளைச்சல் கொண்டதாகவும் அமைவதே சிறந்த நாடாகும்.

10 தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

தீய செயல்களால் தீமையே விளையும் என்பதால் அச்செயல்களைத் தீயை விடக் கொடுமையானவையாகக் கருதி அவற்றைச் செய்திட அஞ்சிட வேண்டும்.

11. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு

ஒருவன் தன் நெஞ்சில் பொறாமை இல்லாமல் வாழும் இயல்பைத் தனக்கு உரிய ஒழுக்க நெறியாகக் கொண்டு போற்ற வேண்டும்.

12. ஒத்த தறவோன் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

ஒப்புரவை அறிந்து பிறருக்கு உதவியாகத் தன் வாழ்வை அமைத்துக் கொள்பவனே உயிர்வாழ்பவன் எனக் கருதப்படுவான் அதற்கு மாறானவன் இறந்தவனே ஆவான்.

13. இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்.

தம்மிடம் வளம் நீங்கி, வறுமை வந்துற்ற காலத்திலும், பிறர்க்கு உதவிடும் ஒப்புரவில் தளராதவர், கடமையுணர்ந்த தகைமையாளர்.

# ஆத்தி சூடி - பகர வருக்கம்

| தமிழ் எழுத்து | தமிழ் வாக்கியம் | English Translation |
|---|---|---|
| ப | பழிப்பன பகரேல் | Speak no vulgarity. |
| பா | பாம்பொடு பழகேல் | Keep away from the vicious. |
| பி | பிழைபடச் சொல்லேல் | Watch out for self-incrimination. |
| பீ | பீடு பெற நில் | Follow path of honor. |
| பு | புகழ்ந்தாரைப் போற்றி வாழ் | Protect your benefactor. |
| பூ | பூமி திருத்தி உண் | Cultivate the land and feed. |
| பெ | பெரியாரைத் துணைக் கொள் | Seek help from the old and wise. |
| பே | பேதைமை அகற்று | Eradicate ignorance. |
| பை | பையலோடு இணங்கேல் | Don't comply with idiots. |
| பொ | பொருள்தனைப் போற்றி வாழ் | Protect and enhance your wealth. |
| போ | போர்த் தொழில் புரியேல் | Don't encourage war. |

- 05 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 1-3 திருக்குறள்களும் மற்றும் ஆத்திசூடி 1-5
- 06 வயதினருக்கு 1-4 திருக்குறள்களும் (4 இன் பொருளும்) மற்றும் ஆத்திசூடி 1-8
- 07 வயதினருக்கு 1-6 திருக்குறள்களும் (4-6 பொருளும்) மற்றும் ஆத்திசூடி 1-11
- 08 - 09 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 1-7 திருக்குறள்களும் (4-7 பொருளும்) மற்றும் தொல்காப்பிய எழுத்ததிகாரம் 1-5
- 10 - 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 1-9 திருக்குறள்களும் (4-9 பொருளும்) மற்றும் தொல்காப்பிய எழுத்ததிகாரம் 1-11
- 13 - 15 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 1-11 திருக்குறள்களும் (4-11 பொருளும்) மற்றும் தொல்காப்பிய எழுத்ததிகாரம் 1-13

# தொல்காப்பியம் - பிறப்பியல்

1. அவ் வழி,

பன்னீர் உயிரும் தம் நிலை திரியா

மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்.

2. அவற்றுள்,

அ ஆ ஆயிரண்டு அங்காந்து இயலும்.

3. இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்

அப் பால் ஐந்தும் அவற்று ஓரன்ன

அவைதாம்,

அண்பல் முதல் நா விளிம்பு உறல் உடைய.

4. உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்

அப் பால் ஐந்தும் இதழ் குவிந்து இயலும்.

5. தம்தம் திரிபே சிறிய என்ப.

6. ககார ஙகாரம் முதல் நா அண்ணம்.

7. சகார ஞகாரம் இடை நா அண்ணம்.

8. டகார ணகாரம் நுனி நா அண்ணம்.
9. அவ் ஆறு எழுத்தும் மூ வகைப் பிறப்பின.

10. அண்ணம் நண்ணிய பல் முதல் மருங்கில்
நா நுனி பரந்து மெய் உற ஒற்ற
தாம் இனிது பிறக்கும் தகார நகாரம்.

11. அணரி நுனி நா அண்ணம் ஒற்ற
ற.்.கான் ன.்.கான் ஆயிரண்டும் பிறக்கும்.

12. நுனி நா அணரி அண்ணம் வருட
ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.

13. நா விளிம்பு வீங்கி அண்பல் முதல் உற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.